**01.இஸ்லாத்தில்** இப்பிரபஞ்சத்தையும் அதிலுள்ளவைகளையும் படைத்தவன் ஒருவன் இருந்தே ஆக வேண்டும், அவன் தான் அல்லாஹ் (கடவுள்) என்பவன் அவன் வானங்களுக்குமேல்இருந்து படைப்புகளை அவதானித்துக் கொண்டிருக்கின்றான். அவன் அவர்கள் செய்பவற்றை பார்ப்பவனாகவும், அவர்கள் பேசுகின்றவைகளைக் கேட்பவனாகவும் இருக்கின்றான். அவனே வணக்கத்திற்கு தகுதி வாய்ந்தனாவான், என்பதனை நீ விசுவாசித்து அவன் அல்லாதவைகளை வணங்குவதை விட்டும் தவிர்ந்திருக்க வேண்டும். இன்னும் அல்லாஹ் மனிதர்களை வீணுக்காகப்படைக்கவில்லை, அவன் மனிதர்களை அவனை வணங்குவதற்காகவே படைத்துள்ளான் என்பதனையும், அவன் மீண்டும் ஒருமுறை அவர்களை மறுமை நாளில் ஒன்று சேர்த்து அவர்கள் உலகில் செய்த செயல்கள் பற்றி விசாரணை செய்வான் என்பதனையும் நீ விசுவாசிக்க வேண்டும்.

**02. .இஸ்லாத்தில்.** அல்லாஹ்வின் அமரர்கள் (மலக்குகள்) மீது விசுவாசம் கொள்ள வேண்டும். அவர்கள் ஒளியினால் படைக்கப்பட்ட மனிதர்களில் நின்றும் மாறுபட்ட அல்லாஹ்வின் அடிமைகள். அவர்கள் குறிப்பீட்ட சில செயல்களில் அமர்த்தப்பட்டுள்ள இறை பணியாளர்கள். இவர்களில் ஜிப்ரீல் (عليه السلام) எனும் வானவர் மூலமே அல்லாஹ் தனது தூதர்களுக்கு இறை வாக்கியங்களை அருளினான்.

**03.இஸ்லாத்தில்** அல்லாஹ்வினால் நபிமார்களுக்கு இறக்கியருளப்பட்ட ஸபூர், இன்ஜீல், தவ்ராத் போன்ற வேத நூல்களை, விசுவாசம் கொள்ள வேண்டும். அவற்றுள் இறுதியாக நபி முகம்மத் (ஸல்) அவர்களுக்கு திருக்குர்ஆன் அருளப்பட்டது. அல் குர்ஆன் அல்லாத ஏனைய வேத நூல்கள் தற்போது வழக்கழிந்தும், மாற்றமடைந்துமேதான் காணப்படுகின்றன. ஆனால் அல் குர்ஆன் மாத்திரமே எவ்வித மாற்றங்களுமின்றி பூரணத்துவம் வாய்ந்ததாகவும், நம்பத் தகுந்ததாகவும் ,உயிரோட்டம் உள்ளதாகவும் காணப்படுகின்றது. அதனை அல்லாஹ் மனிதர்களின் மனங்களில் பதிய வைத்து பாதுகாத்தான். இன்னும் அவனே அதனை பாதுகாப்பதனை பொறுப்பேற்றுக்கொண்டுள்ளான் இன்னும் அது இக்காலத்து அறிஞர்களின் பார்வையிலும் ஆச்சரியப்படக்கூடியதாகவே உள்ளது.



**04.இஸ்லாத்தில்** அவனுடைய தூதர்களை, அவர்களுக்கிடையில் எவ்வித ஏற்றத்தாழ்வுமின்றி விசுவாசம் கொள்ள வேண்டும்.அல்லாஹ் ஆதம் (عليه السلام) அவர்களை மண்ணினால் படைத்தான் அவரே முதல் மனிதர் ஆவார் அவரிலிருந்து சோதனைக்காக அவருக்கு சந்ததியினர்களை உருவாக்கினான். கால ஓட்டத்தில் மனிதர்கள் தடம் புரண்டு, சைத்தானின் வழிகெடுத்தலுக்கு உட்பட்டு, சிலைகளை வணங்கத் தலைப்பட்டு விட்டனர் ஆகவே மனிதர்களுக்கு அவனது தூதை எத்தி வைப்பதற்காக மனிதர்களிலிருந்தே தூதர்களை அனுப்பி வைத்தான். அவர்கள் மனிதர்கள் அல்லாஹ் ஒருவனுக்கு மாத்திரமே வணங்க வேண்டும் என்றும், அவனுக்கு யாதொரு இணையும் வைக்கககூடாதென்றும், நபிமார்களுக்கு வழிப்பட்டு நடக்க வேண்டும் என்றும், அல்லாஹ்வைத்தவிர வேறு யாருக்கும் வணக்கம் செலுத்தக்கூடாதென்றும் மக்களுக்கு வழிகாட்டினார்கள். அவர்களுள் நபி நூஹ், இப்ராஹிம், மூஸா, ஈஸா (عليهم السلام) ஆகியோர்கள் அடங்குவர் இத்தூதர்களில் நபி முகம்மத் (ஸல்) அவர்கள் இறுதியானவரும் சிறப்பு மிக்கவருமாவார்கள். ஒரு மனிதனுடைய இஸ்லாம் அனைத்து நபிமார்களையும் விசுவாசங்கொண்டு அவர்கள் மீது அன்பு கொள்ளாதவரை சீர் பெறாது.

**05.இஸ்லாத்தில்** இவ்வுலகில் நடைபெறும் நன்மை, தீமை அனைத்தும் அல்லாஹ்வின் ஏற்பாட்டின் படியே நடைபெறுகின்றது என்று ஒவ்வொரு முஸ்லீமும் நம்பிக்கைக் கொள்ள வேண்டும். உலகின் எல்லா படைப்பினங்களும் அவனது ஆணைப்படியும் விருப்பத்தின் படியுமே செயல்படுகின்றன . அல்லாஹ் அவைகளைப்படைபதற்கு முன்னதாகவே அவற்றை விதித்து விட்டான். என்றாலும் மனிதர்கள் நல்லவற்றை ஏற்று நடப்பதற்கும், தீயவற்றை தவிர்த்துக்கொள்வதற்கும் முயற்ச்சிகளை மேற்கொள்ள வேண்டும், மேலும் அவர்களது செயல்களுக்குத் தக்கவாறு அவர்கள் பொறுப்பாளர்களும் ஆவார்கள். மேற்கண்ட வகையில் இறைவன் விதியை முன்னரே விதித்திருக்கின்றான் என்பதனால், விதியின் மீது மட்டும் நம்பிக்கை வைத்து யாரும் செயல்படாது இருப்பதற்கு முடியாது.

**06.இஸ்லாம்** நீதி நேர்மை, பிறருக்கு நன்மை புரிதல், உறவினர்களை இணைந்து வாழ்தல், கற்பை பேணுதல், உண்மை உரைத்தல் மற்றும் அணைத்து விதமான நற்குணங்களையும் ஏவுகின்றது. அவ்வாறே அநியாயம்,அக்கிரமம், கொலை கொள்ளை பொய் பெருமை விபச்சாரம், திருட்டு, மற்றும் மக்களை ஆக்கிரமித்தல், போன்ற அனைத்துவிதமான பழிப்புக்குரிய தீய குணாம்சங்களையும் வண்மையாக கண்டிக்கின்றது. சில முஸ்லீம்கள் செய்கின்ற தவறுகளுக்கு இஸ்லாத்தில் குறை காண இடமில்லை அது அதை செய்கின்ற அம்மனிதனுடைய குறையேயாகும்.



**07. இஸ்லாம்** ஓர் செல்வந்தனை ஓர் ஏழையை விட, அல்லது ஓர் ஏழையை ஓர் செல்வந்தனை விட, அல்லது ஒர் அரபியை, அரபி அல்லாத ஒருவனை விட, அல்லது. அரபி அல்லாத ஒருவனை, ஒர் அரபியை விட, அல்லது ஒரு வெள்ளையனை ஒரு கறுப்பனை விட, அல்லது, ஒரு கறுப்பனை ஒரு வெள்ளையனை விட உயர்ந்தவனாகவோ? பிரித்து நோக்குவதில்லை, மனிதர்களுக்குள்ள உயர்வெல்லாம் அவனின் இறை பக்தியைப் பொறுத்தே அமைந்திருக்கிறது.



**08.இஸ்லாம்:** எப்பொழுதும் பாவமீட்ச்சியைப் போதிக்கின்றது எவன் ஒருவன் சில தவறுகளை செய்து விட்டு பிறகு அதற்காக வருந்தி அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகின்றானோ அவனுக்கு அல்லாஹ் மன்னிப்பை வழங்குகின்றான். எந்த ஒருவனும் ஒருவன் அவன் பாவமன்னிப்பு தேடுவதற்கும் அவனுக்கும் மத்தியில் குறுக்கிட முடியாது எனெனில் அவனின் பாவமன்னிப்பானது அவனுக்கும் அவனை எப்பொழுதும் அவதானித்து அவனுக்கு செவிசாய்த்து அவனின் உள்ளத்தில் உள்ளதை அறிந்துகொண்டிருக்கின்ற அல்லாஹ்விற்கும் மத்தியில் உள்ளதாகும்.

**09.இஸ்லாம்:** தூய்மையைப்போதித்து மனிதர்கள் உபயோகிக்கின்ற அத்தனை இடங்களையும் அசூசிகளை அகற்றி தூய்மையாக வைத்துக்கொள்ளுமாறு கட்டளை இடுகின்றது.

**10.இஸ்லாம்** பெண்களுக்கு உயர்வளித்து அவர்களின் வாழ்வாதாரம் பாகப்பிரிவினை போன்ற உரிமைகளை அவர்களுக்கு வழங்கியுள்ளது.

**11.இஸ்லாம்:** அல்லாஹ்வின் வழிமுறைகளுக்கு முறண்படாத வகையில் அமைந்துள்ள மக்களுக்கு தேவையான அவர்களின் வாழ்கையினை இலகுபடுத்தக்கூடியதான இக்காலத்தைய நவீன உபகரணங்களை பயன்படுத்துவதை ஆர்வமூட்டுகின்றது.



**12.இஸ்லாம்:** அதன் எல்லைகள் இலகுவானதும் தெளிவானதும் ஆகும் இஸ்லாமிய சரீஅத்தின் ஆதாரத்தின் அடிப்படையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ள அத்தனை வழிபாடுகளையும் ஒரு முஸ்லிம் பின்பற்றுவான் அது எந்தவொரு மனிதனுடைய ஒப்புதலும் இல்லை. மாறாக அது அல்லாஹ்விடமிருந்து உள்ளதாகும் எனவே அதற்கு அனைத்து மக்களும் அடிபனிதல் கடமையாகும்.

**13.இஸ்லாம்:** குற்றத்திற்கெதிராக போராடும் அவற்றுள் மனிதர்களுடைய புத்தி, உயிர், சுயமரியாதை செல்வம், மார்க்கம் போன்ற ஐந்து விதமான முக்கிய உரிமைகளில் மனிதர்கள் பாதுகாப்புப் பெறும் வகையில் அக்குற்றவாளிகளை கடின தண்டனைக்கு உட்படுத்தும்.



**14.இஸ்லாத்தில்** ஒரு நாளைக்கு நீ ஐந்து நேரமும் அல்லாஹ்விற்காக அதற்குரிய நேரத்தில் அவன் காட்டித்தந்த வழிபிரகாரம் தொழுவது கட்டாயமாகும். இது ஒரு முஸ்லிமை அல்லாஹ்வுடன் பிணைக்கும் செயலாகும்.



**15.இஸ்லாம்** யாரெல்லாம் ஒரு குறிப்பிட்ட அளவு செல்வத்திற்கு சொந்தக்காரர்களாக இருக்கின்றார்களோ அவர்கள் தங்கள் செல்வத்தினை தூய்மையாக்கும் வகையிலும், ஏழைகளுக்கு கருணை காட்டும் வகையிலும் பிரதி வருடமும் ஒரு குறிப்பிட்ட சிறு தொகையினை ஸக்காத்தாக வழங்குமாறு பணிக்கின்றது.



**16.இஸ்லாம** ஒரு வருடத்தில் ஒரு மாதம் நோன்பு வைக்குமாறு பணிக்கின்றது அதாவது ரமழானுடைய மாதத்தில் ஃபஜ்ர் உதயமானதிலிருந்து சூரியன் அஸ்தமனமாகும் வரை ஊண்குடிப்புகளைத் தவிர்ந்திருத்தல் இதனை அல்லாஹ் மனிதர்கள் ஏழைசகோதரர்களின் பசியினை புரிந்து கொள்வதற்கும் உடல் ஆரோக்கியத்திற்கும் இன்னும் அடியார்கள் அவனுக்கு வழிப்படும் விஷயத்தில் எப்படி நடந்து கொள்கின்றார்கள் என்பதனை சோதிப்பதற்காகவும் விதித்துள்ளான்.

**17.இஸ்லாம்** பொருளாதார வசதியும் தேக ஆரோக்கியமும் உள்ள ஒருவர் ஹஜ் கடமையை தமது வாழ்நாளில் ஒரு முறையாவது கட்டாயமாக நிறைவேற்ற வேண்டும் என பணிக்கின்றது அதாவது புனித மக்காவிற்குச் சென்று நபிமார்களான இப்றாஹிம், ஈஸா, முகம்மது ﷺ போன்றோர்களின் வழிமுறைகளைப் பின்பற்றி ஒரு குறிப்பிட்ட சில நல் அமற்களை செய்தலாகும்.





**18.இஸ்லாத்தில்** முகம்மத் நபி (ஸல்) அவர்கள் மனிதர்கள் அனைவர்களுக்கும் நபியாவார்கள் என்று நீ விசுவாசம் கொள்ள வேண்டும்.அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வேதத்தில் முன்னுள்ள வேத வாக்கியங்களில் உள்ள அனைத்தும் ஒருசில சட்ட வித்தியாசங்களுடன் பொதிந்துள்ளன யாரெல்லாம் அவரைப்பற்றி கேள்விப்படுகின்றாரோ அவர் அவரை விசுவாசம் கொண்டு அவர் கொண்டுவந்த வழிமுறையினைப் பின்பற்றுவது கடமையாகும் அல்லாஹ் இஸ்லாம் அல்லாத எந்த வழிமுறையையும் ஏற்றுக் கொள்ளமாட்டான்.

**19.இஸ்லாத்தில்** நபி முகம்மது ﷺ அவர்கள் காட்டித்தந்தவழியில் அல்லாஹ்வை நீ வணங்கி வழிபட வேண்டும் அது இமாம்களான புஹாரி,முஸ்லிம் இன்னும் அதுபோன்றோர்களின் வாயிலாக ஆதாரபூர்வமான நபிவழிச் செய்திகள் மூலம் பெறப்பட்டுள்ளன. அவ்வாறே நீ பொய்யான செய்திகள் திரிபுகள் போன்றவற்றில் வீழ்ந்து விடாது கவனமாக இருந்து கொள்ள வேண்டும்.

**20.இஸ்லாம்** திரிபுபடுத்துதல், அல்லாஹ் அல்லாதவைகளுக்கு வழிப்படுதல் போன்றவைகளை விட்டும் அறிவைக்கூர்மையாக்கியுள்ளது ஆதலால்தான் அடக்கஸ்தலங்களை தரிசிக்க ஆர்வமூட்டும் அதேவேளை மண்ணறைகளை வலம் வருதல், அல்லது மண்ணறைகளில் அறுத்து பலியிடுதல், அல்லது மண்ணறைவாசிகளிடம் பிராத்தித்தல் போன்வைகளை வண்மையாக தடுத்துள்ளது.



**21.இஸ்லாம்** அல்லாஹ் மீது தவக்குல் வைத்தல் எனும் பொறுப்பு சாட்டுதலை ஏவுகின்ற அதே வேளை காரண காரியங்களையும் செய்யுமாறு பனிக்கின்றது. இன்னும் தாயத்து கட்டுதல் சூனியக்காரனிடமும் குறிகாரனிடமும் மற்றும் மந்திரதந்திரம் செய்து மக்களை ஏமாற்றி தவறான வழியில் மக்களின் செல்வத்தை உண்பவனிடமும் செல்லுதல் போன்றவைகளை வண்மையாக தடுக்கின்றது.

**22.இஸ்லாம்** அதிலே இரண்டு பெருநாட்களே இருக்கின்றது அதுவல்லாத இன்றைய மக்கள் ஏற்படுத்திக்கொண்ட நூதனபெருநாட்களை அது அங்கீகரிப்பதில்லை.



**23.இஸ்லாம்** அதனை பின்பற்றுவோர்களை சுத்தம் செய்தல் ,தொழுதல் நோன்புவைத்தல், ஸக்காத்கொடுத்தல், ஹஜ் செய்தல் , கொடுக்கல் வாங்கல் செய்தல், போன்றவைகள் பற்றிய கல்வியினை கற்றுக்கொள்ளுமாறு ஏவுகின்றது.

**24.இஸ்லாம்**

இஸ்லாத்தைப்பற்றி நீ உணர்ந்து கொண்டால் அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹ் வஅஷ்ஹது அன்ன முகம்மதன் றசூலுல்லாஹ் என்று நாவினால் மொழியுமாறு பனிக்கின்றது. அவ்வாறு மொழிவதனால் நீ முஸ்லிமாகின்றாய் எனவே நீ மரணிக்கின்ற வரை அவ்விரண்டு கலிமாக்களின் அடிப்படையில் செயல்பட்டால் நரகிலிருந்து விடுபட்டு சுவர்க்கத்தினை அடைந்து கொள்வாய்.



**25.இஸ்லாம்**

பின்வரக்கூடிய நீ இஸ்லாத்தில் நுழைந்தல், இச்சையுடன் இந்திரியம் வெளிப்படல், மாதவிடாய் மற்றும் பேறுகால தீட்டு நின்று விடுதல் போன்ற நிலைகளில் ஒரு நிலையில் உன் மீது முழுகுழிப்பைக் கடமையாக்குகின்றது.



**26.இஸ்லாம்**

நீ தொழுகையை நிறைவேற்றச்செல்லும் போது பின்வருமாறு சுத்தம் செய்து கொள்ளுமாறு பனிக்கின்றது.

### சுத்தம் செய்யும் முறை

1- இரு கைகளையும் மணிக்கட்டுவரை ஒருமுறை அல்லது இருமுறை அல்லது மும்முறைகள் கழுவுதல்



2- நாசியிற்கு நீர் செலுத்துவதுடன் ஒருமுறை அல்லது இருமுறை அல்லது மும்முறைகள் வாய்கழுதல்



3- முகத்தை ஒருமுறை அல்லது இருமுறை அல்லது மும்முறைகள் கழுவுதல்



4- முதலில் வலது கரத்தையும் அடுத்து இடது கரத்தையும் முழங்கை வரை ஒருமுறை அல்லது இருமுறை அல்லது மும்முறைகள் கழுவுதல்



5- தண்ணீரில் கைகளை நனைத்து இரு காதுகள் உட்பட தலையைத் தடவுதல்





6- முதலில் வலது காலையும் அடுத்து இடது காலையும் கரண்டை வரை ஒருமுறை அல்லது இருமுறை அல்லது மும்முறைகள் கழுவுதல்



## 27.இஸ்லாம் பின்வருமாறு உன்னை தொழுமாறு பனிக்கின்றது

## தொழும் முறை

1. க:.பாவை முன்நோக்கி நின்றவனாக இரு கைகளையும் காது வரை உயாத்தி அல்லாஹு அக்பர் என்று கூறியவனாக நெஞ்சின்மீது இடது கையை வைத்து அதன் மீது வலது கையை வைக்க வேண்டும் பிறகு பின்வரும் பாத்திஹா சூராவை ஓத வேண்டும்.அதாவது : சுப்ஹானக்க அல்லாஹும்ம வபிஹம்திக்க வதபாரக்க ஸ்முக்க வதஆலா ஜத்துக் வலா இலாஹ கைருக் அஊது பில்லாஹி மினஸ் சைத்தானிர்ரஜீம்



بسم الله الرحمن الرحيم

سبحانك اللهم وبحمدك وتبارك اسمك وتعالى جدك ولا إله غيرك

(الحمد لله رب العالمين. الرحمن الرحيم. مالك يوم الدين. إياك نعبد وإياك نستعين. إهدنا الصراط المستقيم. صراط الذين أنعمت عليهم غير المغضوب عليهم ولا الضالين. آمين)

அல்:.பாத்திஹா

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்(துவங்குகிறேன்)

1. அனைத்துப்புகழும்,அகிலங்கள் எல்லாவற்றையும் படைத்து வளர்த்துப் பரிபக்குவப்படுத்தும் (நாயனான) அல்லாஹ்வுக்கே ஆகும்.
2. (அவன்) அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்.
3. (அவனே நியாயத்) தீர்ப்பு நாளின் அதிபதி(யும் ஆவான்).
4. (இறைவா!) உன்னையே நாங்கள் வணங்குகிறோம், உன்னிடமே நாங்கள் உதவியும் தேடுகிறோம்.
5. நீ எங்களை நேர் வழியில் நடத்துவாயாக!
6. (அது) நீ எவர்களுக்கு அருள் புரிந்தாயோ அவ்வழி.
7. (அது) உன் கோபத்துக்கு ஆளானோர் வழியுமல்ல, நெறி தவறியோர் வழியுமல்ல.

அதன் பிறகு நீ விரும்பிய உனக்கு தெரிந்த ஒரு சிறிய அத்தியாயத்தினை ஓதிக்கொள் உதாரணமாக சூரத்துல் இஹ்லாஸ் அதாவது: بسم الله الرحمن الرحيم

(قل هو الله أحد. ألله الصمد. لم يلد ولم يولد. ولم يكن له كفواً أحد.)

ஸூரத்துல் இ:.க்லாஸ் (ஏகத்துவம்)

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்(துவங்குகின்றேன்)

1. (நபியே!) நீர் கூறுவீராக: அல்லாஹ் அவன் ஒருவனே.
2. அல்லாஹ் (எவரிடத்தும்) தேவையற்றவன்.
3. அவன் (எவரையும்) பெறவுமில்லை (எவராலும்) பெறப்படவுமில்லை.
4. அன்றியும், அவனுக்கு நிகராக எவரும் இல்லை.





2. பிறகு அல்லாஹு அக்பர் (அல்லாஹ் மிகப் பெரியவன்) என்று கூறியவாறு றுகூவுக்கு குனிதல் வேண்டும் அதில் 'சுப்ஹா னரப்பியல் அழீம்' என்று கூற வேண்டும் அதைனைத் திரும்பத்திரும்பக் கூறுவது சிறந்ததாகும்.



3. சமி அல்லாஹு லிமன் ஹமிதஹ் (ரப்பனா வலக்கல் ஹம்து) என்று கூறியவாறு றுகூவிலிருந்து நிலைக்கு எழும்புதல் வேண்டும்

4. பிறகு அல்லாஹு அக்பர் (அல்லாஹ் மிகப் பெரியவன்) என்று கூறியவாறு நிலத்தில் நெற்றியை வைத்து சிரம் பனிதல் வேண்டும். அதில் 'சுப்ஹா னரப்பியல் அ:.லா' என்று கூற வேண்டும் அதைனைத் திரும்பத்திரும்பக் கூறுவது சிறந்ததாகும்.



5. பிறகு அல்லாஹு அக்பர் (அல்லாஹ் மிகப் பெரியவன்) என்று கூறியவாறு தலையை தூக்கி நிலத்தில் அமருதல் வேண்டும் அதில் 'ரப்பி:.பிர்லீ' என்று கூற வேண்டும் அதைனைத் திரும்பத் திரும்பக் கூறுவது சிறந்ததாகும்.



6- பிறகு அல்லாஹு அக்பர் (அல்லாஹ் மிகப் பெரியவன்) என்று கூறியவாறு நிலத்தில் நெற்றியை வைத்து சிரம் பனிதல் வேண்டும். அதில் 'சுப்ஹா னரப்பியல் அ:.லா' என்று கூற வேண்டும் அதைனைத் திரும்பத்திரும்பக் கூறுவது சிறந்ததாகும்.



7- பிறகு அல்லாஹு அக்பர் (அல்லாஹ் மிகப் பெரியவன்) என்று கூறியவாறு தலையை தூக்கி இரண்டாவது ரகஅத்தின் நிலைக்கு வரவேண்டும் அதில் முதல் ரகஅத்தின் நிலையில் செய்தது போன்று செய்ய வேண்டும்.






8- அவ்வாறு இரண்டாவது ரக்கஅத்தை செய்து முடித்தால் சுஜூதிலிருந்து அல்லாஹு அக்பர் (அல்லாஹ் மிகப் பெரியவன்) என்று கூறியவாறு தலையை தூக்கி நிலத்தில் அமருதல் வேண்டும் அதில் முதலாவது அத்தஹ்யாத்து ஓதுதல் வேண்டும்.(அதாவது: அத்தஹ்யாத்துலில்லாஹி வஸ்ஸலவாத்து வத்தய்யிபாத்து அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன்நபிய்யு வரஹ்மத்துல்லாஹி வபரகாத்ஹு அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன் அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரசூலுஹு.)



9- தொழுகை இரண்டு ரக்அத்துக்களையுடையதாகவிருந்தால் பின்வரக்கூடிய அத்தஹ்யாத்தின் இறுதிப்பகுதியையும் பூர்த்தி செய்து தொழுகையை ஸலாம் கொடுத்து முடித்துக்கொள்ள வேண்டும். தொழுகை இரண்டு ரக்அத்துக்களை விட அதிகமுள்ளதாகவிருந்தால் முதலாவது அத்தஹ்யாத்தை முடித்து விட்டு முன்னுள்ள ரக்அத்துக்களில் செய்தது போன்று செய்ய வேண்டும்

10- தொழுகையின் கடைசியில் சுஜூதிலிருந்து அல்லாஹு அக்பர் (அல்லாஹ் மிகப் பெரியவன்) என்று கூறியவாறு தலையை தூக்கி நிலத்தில் அமருதல் வேண்டும் அதில் முதலாவது அத்தஹ்யாத்து ஓதிய பின் பின்வருபவையை ஓத வேண்டும். அதாவது(அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லைத்த அலா இப்றாஹிம் வஅலா ஆலி இப்றாஹிம் இன்னக்க ஹமீதுன் மஜீத் அல்லாஹும்ம பாரிக் அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா பாரக்த்த அலா இப்றாஹீம வஅலாஆலி இப்றாஹீம இன்னக்க ஹமீதுன் மஜீத்)






11- இறுதி அத்தஹ்யாத்திற்குப்பிறகு (அல்லாஹும்ம ரப்பனா ஆத்தினா பித்துன்யா ஹசனத்தன் வபில் ஆகிரத்தி ஹசனத்தன் அல்லாஹும்ம இன்னி அஊதுபிக்க மின் அதாபி ஜஹன்னம் வமின் அதாபில் கப்ர் வமின் பித்னத்தில் மஹ்யா வல் மமாத் வமின் பித்னத்தில் மஸீஹுத் தஜ்ஜால்

12- அதன்பிறகு வலது புறம் திரும்பி அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹ் என்று கூற வேண்டும் அதனைத் தொடர்ந்து இடது புறம் திரும்பி அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹ் என்று கூற வேண்டும்





| தொ | தொழுகை | ரக்அத் | நேரம் |
|---|---|---|---|
| 01 | பஜ்ர் (அதிகாலை) | 02 | கீழ்வானம் வெளுத்ததிலிருந்து சூரியன் உதிக்கும்வரை |
| 02 | ளுஹர்(மதியம்) | 04 | சூரியன் உச்சியிலிருந்து சாய்ந்ததிலிருந்து ஒரு பொருளின் நிழல் அதன் அளவாகும்வரை |
| 03 | அஸர் (மாலை) | 04 | ளுஹருடைய நேரம் முடிந்ததிலிருந்து சூரியன் மஞ்சலாகும் வரை நிர்ப்பந்தத்தின்போது சூரியன் மறையும்வரை பிற்படுத்தலாம் |
| 04 | ம:.ரிப்(அஸ்தமனம்) | 03 | சூரியன் மறைந்ததிலிருந்து செம்மேகம் மறையும் வரை |
| 05 | இஷா (இரவு) | 04 | செம்மேகம் மறைந்ததிலிருந்து நள்ளிரவு வரை |



تاميلية

Tamil



# هذا هو الإسلام

# இதுதான் இஸ்லாம்

## (சுருக்கம்)

இதுதான் இஸ்லாம் எனும் இப்பிரசுரம் சங்கைக்குரிய மாாக்க அறிஞரும் பொறியியலாளருமாகிய இப்றாகிம் அல் – எஹியா அவர்களால் அரபி மொழியில் எழுதப்பட்டதாகும், இது உலகில் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது இதனை நன்மைகருதி பிரசுரிக்க விரும்புபவர்கள் பின்வரும் தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்: – 00966505412038

ly1001@hotmail.com - www.islaminbrief.com

المكتب التعاوني للدعوة والإرشاد وتوعية الجاليات بحي البشر ـ ببريدة
هاتف: ٠٠٩٦٦٦ ٣٨٥١٠٠٥ـ فاكس: ٠٠٩٦٦٦ ٣٨٥١٠٠٤
رقم الحساب: ١٩٢٦٠٨٠١٠٠٦٠٠٠٠
K.S.A. Foreigners Guidance Centre in Al-Besher
Tel: 009666 3851005 - Fax: 009666 3851004
Account No: 192608010060000